# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முறையீட்டு மனு எண் : 1028/பேரூ-2/2016**

**ஆணை எண் : 190/2017**

**நாள் : 24.07.2017**

திருமதி. ராமாயி என்ற சின்னம்மாள்,
க/பெ. சண்முகவேல்,
14 – வது வார்டு, நாயக்கர் நடுத்தெரு,
ஒபுளாபுரம், ஆயக்குடி,
திண்டுக்கல் மாவட்டம். — **முறையீட்டு மனுதாரர்**

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். — **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாவட்டம், 14-வது வார்டு, நாயக்கர் நடுத் தெரு, ஒபுளாபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. ராமாயி என்ற சின்னம்மாள் என்பவரது 01.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2016 அன்று பெறப்பட்டு 1028/2016 எண்ணிட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது. உரிய ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியைச் சேர்ந்த திருமதி. ராமாயி என்ற சின்னம்மாள் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கடந்த 1994-ம் ஆண்டு சக்திவேல் என்பவரின் வாரிசுகளான அவரது மனைவியிடமும் அவரது மகன்களிடமும் கிரையம் பெற்ற சொத்திற்கு சொந்தமான குடிநீர் இணைப்பு எண்.896, தனது பயன்பாட்டில் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். தனது வீட்டின் அருகாமையில் உள்ள வீட்டினை திருமதி. அம்மணியம்மாள் என்பவர்

திரு. நாகராஜன் த/பெ. நாராயணசாமி என்பவருக்கு 30.09.2011–ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார். கிரைய ஆவண எண்.2728/2011 என்றும் திரு. நாகராஜன் வாங்கிய கிரைய பத்திரத்தில் தங்களுக்கு பாத்தியப்பட்ட குடிநீர் இணைப்பு எண்.896 என பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர்- 2015–ல் குடிநீர் இணைப்பு எண்.896 ஐ தனது பெயருக்கு மாற்றம் செய்யக் கோரி பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு கொடுத்ததாகவும், செயல் அலுவலர் தனக்கு சொந்தமான குடிநீர் இணைப்பை வழங்க மறுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக விசாரித்து ஆவணங்களை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறும் நாகராஜன் பெயருக்கு குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளதை ரத்து செய்து, தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கோரி இம்முறை மன்றத்திற்கு முறையீடு செய்துள்ளார். மேலும் அலுவலக உதவியாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறையீடு குறித்து 6.10.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளது. 12.12.2016 நாளிட்ட தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

*"...மனுதாரர் திருமதி. ராமாயியம்மாள் என்ற சின்னம்மாள் என்பவருக்கு கடந்த 03.10.1994ம் தேதியில் திருமதி.சுப்புலட்சுமி க/பெ.(லேட்) சக்திவேல் என்பவர் சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளார். கிரையப் பத்திரத்தில் குடிநீர் இணைப்பு எண் குறிப்பிடப்படாமல் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் அருகாமையில் உள்ள வீட்டினை திருமதி.அம்மணியம்மாள் என்பவர் திரு.நாகராஜன் த/பெ. நாராயணசாமி என்பவருக்கு 30.09.2011 அன்று சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளனர். கிரையப் பத்திரத்தில் தங்களுக்கு பாத்தியப்பட்ட குடிநீர் இணைப்பு எண்.896 என பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*மேற்படி இரண்டு கிரையப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள குழாய் இணைப்பானது ஒருவருக்கு சொந்தமானது. ஒரே குழாய் இணைப்பை இரண்டு நபர்களின் பத்திரத்தில் திருமதி.ராமாயியம்மாள் (எ) சின்னம்மாள் என்பவர் பத்திரத்தில் குழாய் இணைப்பு எண் பதியப்படாமல் இருந்ததை 08.02.2016–ம் தேதியில் குழாய் இணைப்பு எண்.896 என குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இரண்டு நபர்களும் கிரையப் பத்திரத்தை கொண்டு குடிநீர் குழாய் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய கோரியதை தொடர்ந்து இவ்வலுவலகத்தின் மூலம் பெயர் மாற்றம் செய்வதற்கு வழிவகை இல்லை என இரண்டு தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண்.896-ஐ பெயர் மாற்றம் செய்யப்படாமல் திரு.நாகராஜன் என்பவர் திரு.சக்திவேல் என்பவர் பெயரில் வரி செலுத்தி வருகிறார் "* எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் குற்றச்சாட்டு சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 20.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மனுதாரர் 20.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்கு மூலத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*"...கடந்த 1994-ஆம் ஆண்டு நான் தற்பொழுது குடியிருக்கும் 14-வது வார்டு ஆயக்குடி கிராமம் ஒபுளாபுரம் குடிநீர் இணைப்பை என் பெயருக்கு மாற்றி கொடுக்காமல், 2011-ம் ஆண்டில் சம்பந்தம் இல்லாத அம்மணியம்மாள் என்பவர திரு. நாகராஜன் என்பவருக்கு என்னுடைய பைப் லைனை இணைத்து பத்திரப் பதிவு செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். அதன் அடிப்படையில் ஆயக்குடி பேரூராட்சி இந்த குடிநீர் எண்.896 திரு.நாகராஜன் என்பவருக்கு மாற்றி கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள், என் பெயருக்கு மாற்றி தருமாறு நான் பலமுறை மனு செய்தும் என் பெயருக்கு மாற்றி கொடுக்கவில்லை..." எனத் தெரிவித்துள்ளார்.*

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், ஆயக்குடி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டன. குடிநீர் இணைப்பு எண்.896 திரு. சக்திவேல் பெயரில் இருந்துள்ளதென்றும் ஆனால் திரு. நாகராஜன் என்பவரது பயன்பாட்டில் உள்ளது என்றும் ஆயக்குடி பேரூராட்சி அலுவலக பொது தகவல் அலுவலரது 29.7.16 நாளிட்ட கடித வாயிலாக தெரிகிறது. மேற்படி திரு. சக்திவேல் என்பவரது மனைவி மற்றும் வாரிசுதாரர்களிடமிருந்து 1994ல் கிரையம் பெற்ற மனுதாரர் சொத்து (கதவு எண்.59) மற்றும் வழக்கிலுள்ள குடிநீர் இணைப்பை பெற்றுள்ளார். இருப்பினும், குடிநீர் இணைப்பு பெயர் மாற்றத்திற்கு 6/2015 வரை விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிகிறது. இந்நிலையில் 4வது

எதிர்மனுதாரர் திரு. நாகராஜன் என்பவர் 2011ல் திருமதி. அம்மணியம்மாள் என்பவரிடமிருந்து கதவு எண்.58ல் கண்ட வீட்டினைப் பெற்று குடிநீர் இணைப்பு 896ஐ பெயர் மாற்றம் செய்து பயன்படுத்தி வருவதாகவும் தெரிகிறது. இந்நிலையில் புதியதோர் குடிநீர் இணைப்பை முறையீட்டு மனுதாரருக்கு வழங்க பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

28-7-17

28/7/17

பெறுநர்

1. திருமதி. ராமாயி என்ற சின்னம்மாள்,
   க/பெ. சண்முகவேல்,
   14 – வது வார்டு, நாயக்கர் நடுத்தெரு,
   ஒபுளாபுரம், ஆயக்குடி,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   ஆயக்குடி பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திண்டுக்கல் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியரகம்,
   திண்டுக்கல் மாவட்டம்.